தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்




## வேல்ஸ் பல்கலைக்கழகத்தில்

# மகளிர் தின விழா கொண்டாட்டம்

சென்னை, மார்ச்.9-

உலக மகளிர் தினம் நேற்று உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில், சென்னை பல்லாவரத்தில் அமைந்துள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் சார்பாகவும் உலக மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவின் சிறப்பு நிகழ்வாக பெண்களின் தொழில் சார்ந்த முயற்சியை ஊக்கப்படுத்தும் விதத்தில் 'வீ-பன்ட் நிதி' என்னும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்படி, சிறந்த திட்டத்தை முன் வைத்த 5 பெண்களை தேர்வு செய்து தொழில் முனைவதற்கான ஆரம்ப தொகையாக தலா ரூ.1 லட்சத்தை வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனரும், வேந்தருமான ஐசரி கே.கணேஷ் வழங்கினார்.

விழாவில், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் துணைத்தலைவர் பிரீதா கணேஷ், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் இணை துணை வேந்தர் ஆர்த்தி கணேஷ், ஓமந்தூரார் அரசு பல் நோக்கு மருத்துவமனையின் மருத்துவ நிலைய அதிகாரி டாக்டர் பி.உமாமகேஷ்வரி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

'வீ-பன்ட் நிதி' திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட 5 பேரின் விவரங்கள் வருமாறு:- 1.ஆர். ஹம்ஸவர்த்திணி (நாம் தொழுயு அமைப்பு), 2.எஸ்.மஹேஸ்வரி (கோர் ஐடியா இனொவேஷன்ஸ்), 3.ஹாமிணி செந்தில்குமார் (ஓர் கணோ ஜெனிக் பையோடேக் பிரைவேட் லிமிடெட்) 4.ஜி.பி.கிருஷ்ண பிரியா (ஸ்டார்ட்ஸ் கோர்ஸ் பிரைவேட் லிமிடெட்) 5.இ.மேனகா (மண் வாசனை).